**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை**

**அசல் வழக்கு எண். 153/2022**

PW1 – திரு.தனசேகரன் நாள். 01.02.2024

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திரு.S.துரைமுருகன் என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**குறுக்கு விசாரணை**

1. நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். எந்த சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சர்வே எண். 69 என்ற சொத்திற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி சொத்தானது கிரையம் வாங்கப்பட்ட சொத்தா என்றால் பூர்வீக சொத்தாகும். எவ்வகையில் பூர்வீக சொத்து என்றால் நத்தம் புறம்போக்கு நிலத்தில் எனது தாயார் அனுபவித்து வந்து அதனடிப்படையில் பூர்வீக சொத்தாகும். எனது தகப்பனார் எந்த ஊரைச் சேர்ந்தவர் ஆய்க்குடி ஊரைச் சேர்ந்தவர். எனது தகப்பனாருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் நான் மட்டும். எனது தாயார் எப்பொழுது இறந்தார் என்றால் சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் இறந்தார்.

2. மேற்படி தாவா சொத்தில் என்ன வீடு கட்டியுள்ளேன் என்றால் பசுமை வீடு கட்டியுள்ளேன். மேற்படி வீடானது எப்பொழுது கட்டப்பட்டது என்றால் 15 வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்டது. மேற்படி வீடானது அரசாங்கம் யார்

பெயருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றால் எனது பெயருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. வா.சா.ஆ.1 வரிரசீதுகள் மேற்படி பசுமை வீட்டிற்கானதா என்றால் ஆமாம். மேற்படி வா.சா.ஆ.1 வரிரசீதுகளில் வரிவிதிப்பு எண் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

3. எனக்கு விவசாய நிலங்கள் எவ்வளவு உள்ளது என்றால் 1.5 ஏக்கர் உள்ளது. மேற்படி நிலங்கள் யார் பெயரில் உள்ளது என்றால் எனது பெயரில் உள்ளது. எனக்கு வேறு நத்தம் நிலங்கள் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்திற்கு எப்பொழுது வழங்கப்பட்டது என்றால் சுமார் 50 வருடங்களுக்கு முன்னர் எனது தாயார் பெயரில் வழங்கப்பட்டது. எனது பெயரில் எப்பொழுது மாற்றப்பட்டது என்றால் சுமார் 5 வருடங்களுக்கு முன்னர் மாற்றப்பட்டது. மேற்படி எனது பெயரில் உள்ள பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 ஆவணம் என்னவென்றால் அதை பற்றி தெரியாது.

4. வா.சா.ஆ.2 ஆவணமானது அரசுக்கு மாதந்தோறும் செலுத்தப்படும் கிஸ்திக்கான ஆவணம் என்றால் சரிதான். தாவா சொத்தின் நான்கு மால் என்னவென்றால் வடக்கு பக்கம் எனது நிலமும், தெற்கு பக்கம் தார் சாலையும், மேற்கு பக்கம் பாலசுப்பிரமணியன் நிலமும் மற்றும் கிழக்கு பக்கம் ஆறுமுகம், பஞ்சவர்ணம் நிலமும் உள்ளது. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு வழக்கறிஞரிடம் விவரம் சொன்னது யார் என்றால் நான் தான். தாவா சொத்திற்கு வடக்கு பக்கம் வினோத்குமாரின் நிலம் உள்ளது என்று எனது பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வடபுறம் உள்ள நிலம் தொடர்பாக எனக்கும் பிரதிவாதிக்கும் பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். எதற்காக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தாவா சொத்திற்கு வடபுறம் உள்ள நிலமானது பிரதிவாதியின் நிலம் என்று பிரச்சனை செய்ததால் அதற்காக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்திற்கு வடபுறம் உள்ள

சொத்திற்கான சர்வே எண் என்னவென்றால் தாவா சொத்தின் சர்வே எண்ணான 90/11 ஆகும்.

**(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

(ஓம்/திரு.தெ.மனிஷ்குமார்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை